முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24 திகதி முதல்

சுபகிருது வருடம் தை மாதம் 01 திகதி வரை

(08.01.2023 ஞாயிறு முதல் 15.01.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞானியே அரங்கா
   அன்னதான பலமிக்க தேசிகா
   அவணியில் உன் பெருமைதனை கூறி
   அறிவிப்பேன் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே சுபகிருது சிலைதிங்கள் அறுநான்கு திகதி மேல்
   தக்கபடி கலைதிங்கள் முதல் திகதி வரை
   இன்னாளில் நடக்கும் வருங்கால பலனாக
   இயம்பிடுவேன் அகத்தியனும் வார ஆசிதன்னை
3. தன்னிலே இந்திய தமிழக ஆளுமை
   தக்கபடி ஞானவழிகளை ஏற்று
   அன்னதான சேவைகளும் செய்து
   ஆளுமையில் தயவை காட்டி
4. காட்டியே நலத்திட்டங்கள் தன்னை
   கண்ணியமுற மக்களிடை செயல்படுத்தி
   வாட்டம் போக்கும் வண்ணம்
   வல்லமைபட ஆளுமை நடத்திட
5. நடத்திடவே நல்லாட்சி ஞானஆட்சியாக
   ஞானிகளின் துணைகளும் உண்டாக
   இடர்களில்லா ஏற்றம் காணும்
   இனிமேலும் இந்த சரணாகதி காணா
6. காணா மக்களை வஞ்சிக்கும்
   கண்ணியமிலா ஊழல் தன்மைபட
   ஞானமிலா ஆளுமை தொடர்ந்தால்
   நாடெங்கிலும் இயற்கை சீற்றமாகி
7. ஆகியே வளர்ச்சிகள் முடங்கும்
   ஆளுமை கொண்டவர்களிடை
   மகிழ்வை இழந்து மாச்சர்யம்
   மகாதுன்பம் பீடிக்க நேரும்
8. நேருமே பிணி சோடைஆக
   நச்சுக்கிருமி இடராகப் பரவி
   பெருமளவு உயிர்பலித் துன்பம்
   பின்னடைவு ஆளுமைக்கு கண்டு

9. கண்டுமே தேசவளர்ச்சிக் குன்றும்
கடன்சுமை பெருகி ஆளுமைக்கு
உண்டாகும் பலவாற் நெருக்கடி
உயர்விலா இந்தநிலை அணுகா
10. அணுகா பெரும்பாதுகாப்பு பெற
ஆளுமை திடம் ஞானபலமடைய
ஞானதேசிகன் சன்மார்க்க வழியை
நம்பிக்கை வைத்து ஆளுமைகள் வர
11. வருகவே இந்தியா தமிழகமும்
வளர்ச்சிநிலை கண்டு மாற்றம்
முருகப்பெருமான் ஆளுமையாக மாறும்
மொழிந்திட்ட வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24ம் நாள் 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 1ம் நாள் 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகள் :

கலியுகத்தை மாற்றி ஞானயுகம் படைத்திடவே கலியுக மக்களுக்கு உண்மை ஞானம் போதித்து கடைத்தேற்றிடவே முருகப்பெருமானின் ஆற்றலாக அவதரித்திட்ட அவதார ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகரே எல்லையில்லாது அன்னதானம் செய்து தர்மபலம் பெருக்கி தருமபலம் மிகக் கொண்ட ஞானதேசிகனே தர்மமே உலகை காக்கும் என உலகிற்கு அருளும் குருநாதனே அரங்க மகா தேசிகரே உமது பெருமைகளை உலகறியக் கூறியே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24ம் நாள் 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் முதல் நாள் 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை வரையில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழக ஆளுமைகள், அதிகாரிகள் அவரவரும் மெய்யறிவுபூர்வமான ஞானவழிகளை ஏற்று தர்மத்தின் சக்தி உணர்ந்து தர்மபலம் பெருக்கும் பொருட்டு நாடெங்கிலும் அன்னதான சேவைகளை அதிகமாகச் செய்தும், நாட்டு மக்கள் மீது தயவுடனும் நடந்து மக்களுக்கான நலத்திட்டங்களை கண்ணியத்துடன் மக்களுக்கே முழுமையாக சென்றடையும்படி செயல்படுத்தி மக்களின் துன்பங்களைப் போக்கி வல்லமையுடன் ஆட்சி செய்து வர அரசுகளின் நல்ல ஆட்சியானது ஞானிகளின் துணையைப் பெற்று ஞானஆட்சியாக எந்தவித துன்பமும் இடையூறுகளும் இல்லாத ஆட்சியாக ஏற்றம் காணும்.

ஆகவே இனிமேலாகினும் சரணாகதி அடையாமல் மக்களை வஞ்சிக்கின்ற கண்ணியமற்ற ஊழலை தொடர்ந்து செய்வதுடன் மக்களை வஞ்சித்தும் ஆட்சி செய்திட்டால் நாட்டின் பாவசுமை பெருகி நாடெங்கிலும் இயற்கை சீற்றங்கள் உருவாகி நாட்டின் வளர்ச்சி முடங்கும்.

ஆட்சி புரிபவர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பதுடன் மகிழ்ச்சியையும் இழப்பார்கள் மக்களிடையே பேதாபேதங்கள் உண்டாகும் பெரும் துன்பத்திற்கு ஆளாவார்கள் தருமபல குறைவினாலே நோய்களாக, இயற்கை சீற்றங்களாக உருவாகிடும் பெரும் உயிர்பலி துன்பம் நாட்டில் உண்டாகும் வாய்ப்பு உள்ளதப்பா. ஆட்சி புரிவோருக்கும் பின்னடைவு உண்டாகும்.

தேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் பாதிக்கும், நாட்டின் கடன்சுமை பெருகும். அரசிற்கு பலவிதமான நெருக்கடிகள் உண்டாகும்.

ஆகவே இந்தவித அவலங்கள் நாட்டினில் உருவாகாமல் இருக்க வேண்டுமாயின் திடமான ஆட்சியுடன் செயல்படவும் அறிவார்ந்த ஞானபலம் பெறவும், ஞானிகள் துணையை பெறவும் ஆட்சி புரிவோர் தயவு நெறிக்கொள்கையான சுத்த சன்மார்க்க நெறியினை ஏற்று கடைப்பிடித்தால் இந்தியா தமிழகம் ஆட்சி வலுவடைந்து எல்லா வளர்ச்சி நிலையையும் நாடு அடைந்து ஞானத்தலைவன் முருகப்பெருமானின் தயவு மிக்க ஆட்சியாக ஞானஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–